1990 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய அந்த பிரச்சினைக்கான விவரம் என்னிடம் இல்லை. தனியாக கேள்வி போட்டால் உரிய விவரங்களை சேகரித்துத் தரலாம்.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, கிராம கூட்டுறவு வங்கிகளில் நகைக்கடன் வழங்குகிறபோது அதற்கு பங்குத் தொகை கேட்கிறார்கள். ஐ. ஆர். டி. பி. லோன் வாங்கினாலும் கூட பங்குத் தொகை கேட்கிறார்கள். ஆகவே, எந்தக் கடனை கொடுத்தாலும் அதற்கு பங்குத் தொகை கேட்கிறார்கள். இதர வங்கிகளில் பங்குத் தொகை கேட்பது கிடையாது. ஸ்டேட் பாங்க், ஐ.ஓ.பி.யைப் போல இங்கும் நடைமுறைப் படுத்துவதற்கு, ஷேர் கேபிடல் இல்லாமல் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, இது கூட்டுறவு வங்கி—நம்மால் நடத்தப்படுகிற, நம்மால் நிதியுதவி செய்து நடத்தப்படுகிற கூட்டுறவு வங்கி. இதிலே பங்குத் தொகை பெறாமல் வங்கிகள் செயல்பட இயலாது. அதுதான் அடிப்படைத் தத்துவம்.

கூட்டுறவு வார விழா

*4274—திரு. செ. நூர்முகமது :
திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

ஆண்டுதோறும் நடைபெறுகிற கூட்டுறவு வார விழாவிற்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு கல்வி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து செலவிடப்படும் செலவுகளில் முறை கேடுகள் நடந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, கூட்டுறவு வார விழாவிற்கான செலவுகளை, தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து மேற் கொள்ள வழிவகை உள்ளது. இவ்வாறு செலவு செய்ததில் சில முறைகேடுகள் குறித்த புகார் மனு அரசால் பெறப்பட்டு, தற் போது அப்புகார்கள் மீது ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை யினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை நிலுவை யில் உள்ளது.

9-30 மணி

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப் பிடும்போது முறைகேடுகள் நடந்திருக்கிறது என்று

குறிப்பிட்டார்கள். எவ்வளவு தொகைக்கான முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பதை அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன், முத்துஇரமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில இனங்களின் முறைகேடுகள் நடந்திருப்பதாகத்தான் விவரம், இருக்கிறது. ஆனால் எவ்வளவு என்பதற்கான விவரம் இல்லை. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் கூட்டுறவு பேங்க்ஸ், கூட்டுறவு காகிதக் கொடி, கூட்டுறவுத் துணிக் கொடி, கூட்டுறவுகள் குறித்த தொலைப்பேசிப் புஸ்தகம், மர அடுக்குகள் விருந்தினர் விடுதிக்குத் தேவைகான சில சாமான்கள், மற்றும் தமிழ்நாடு ஒன்றியம் வெளியிடும் பிரசுரங்களுக்குத் தேவையான வெள்ளைத் தாட்கள் போன்றவை வாங்கியதில் ஏற்பட்ட சில முறைகேடுகள் குறித்து புகார் மனு ஒன்று அரசு மூலம் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அலுவலகத்திலே பெறப்பட்டு, தற்போது அந்தப் புகார் மீது ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறையினரால், விசாரணை மேற்கொள்ளப்பட்டு; விசாரணை நிலுவையில் உள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முறைகேடுகள் எல்லாம் பல ஆண்டுக்காலமாக கூட்டுறவு ஒன்றியத்திலே நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. கூட்டுறவு வார விழா என்ற அதற்கு பல லட்சக் கணக்கான தொகைகள் செலவிடப்படுகிறபோது, அதிலே தொடர்ந்து முறைகேடுகள் நடந்து வந்திருப்பதைப் பற்றி, அங்குள்ள சங்கமும் புகார் எழுப்பியிருக்கிறது. பல்வேறு கூட்டுறவு அமைப்புகளும், கூட்டுறவாளர்களும் புகார்களை எழுப்பியிருக்கிறார்கள். நம்முடைய அரசு ஆட்சி அமைந்து 15 மாத காலம் ஆனதற்குப் பிறகும் கூட, இன்னும் விசாரணை விசாரணை என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். கூட்டுறவிலே முறைகேடுகளை நடத்துபவர்களைப் பற்றி உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தயக்கம் இருக்கிறதா ? இந்த விசாரணையைத் துரிதமாக முடிப்பதற்கு ஏன் முடியவில்லை என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. பொன், முத்துராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்டவர்கள் மீது பல்வேறு புகார்கள் இருக்கின்றன. சில புகார்கள் தொடர்ந்து விசாரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. சில புகார்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு, 409, 420 ஆகிய இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை தொடர்ந்த

1990 ஏப்ரல் 12]

நேரத்தில், தொடர்புடையவர்கள் உயர் நீதி மன்றத்திலே தடை-ஆணை பெற்றிருக்கின்ற காரணத்தாலேதான் இந்த வழக்கு அத்தோடு நின்று கொண்டிருக்கிறது. தடை ஆணையைக் காலி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அரசு தீவிரமான முயற்சி மேற்கொண்டிருக்கிறது. கடந்த காலத்தில் நடந்தவைகளுக்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்திலே இந்த அரசு விழிப்பாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுகளுக்கு நீண்டகாலமாகத் தேர்தல்கள் இல்லாததால், தனி அதிகாரிகளுடைய நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகிறது. ஆகவே இம்மாதிரியான ஊழல்கள் நடப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கிறபடியால், கூட்டுறவுத் துறைக்கு உடனடியாக தேர்தல் நடத்துவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூட்டுறவுத் தேர்தல் பற்றி இங்கே கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே தெளிவாக இந்த மன்றத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன். உரிய சட்டத் திருத்தங்களை, கூட்டுறவுச் சட்டத்திலும், கூட்டுறவு விதிகளிலும் கொண்டுவந்து ஜூலை மாதம் அல்லது ஆகஸ்டு மாதத்திலே தேர்தலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று இந்த மன்றத்திலே வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். மீண்டும் வாக்குறுதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

வெள்ளாற்றின் மேல் பாலம் கட்டுதல்.

*3257—டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்ஆற்காடு மாவட்டத்தில் சி. முட்லூருக்கும், பி. முட்லூருக்கும் இடையே வெள்ளாற்றின் மேல் பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1989-90 நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கடலூர்—கன்னியாகுமரி கடற்கரை சாலைத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென் ஆற்காடு மாவட்டத்தில் சி. முட்லூருக்கும், பி. முட்லூருக்கும் இடையில் வெள்ளாற்றின் மீது பாலம் கட்டுகிற திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.